06.11.2025
CC No. 103/2024
ம.சா.1 காத்திகேயன், த/பெ.ஜெயச்சந்திரன், காரைக்குடி
<u>குறுக்கு விசாரணை</u>

1) எதிரி என் உறவினரா என்றால் இல்லை நண்பர். எதிரி என்னுடன் வேலை செய்கிறாரா என்றால் இல்லை. எதிரி என்னுடன் பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கவில்லை. எதிரி எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் சுமார் 4 முதல் 5 ஆண்கள் வரை பழக்கம். எதிரி எனக்கு எப்படி பழக்கம் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் மூலமாகவும், என் வீட்டிற்கு அடுத்த தெருவில் வசித்து வருவதாலும் பழக்கம். நான் தாக்கல் செய்துள்ள புகார்மனு, வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எதிரி எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தனர் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். நான்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை தவிர எதிரி வேறு ஆவணங்கள் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுத்தார். நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் மேற்டிப ஆவணத்தை நான் எங்கு வைத்தேன் என்று தெரியவில்லை நான் தேடி தருவதாக கூறியிருந்தேன். தற்போது தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். அவ்வாறு வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்வதாக கூறியிருக்கிறேனா என்றால் இல்லை.

2) நீதிமன்றத்திற்கு என் நண்பர் ஆல்வின் விவேக் என்பவருடன் வருவதுண்டா என்றால் இல்லை. நானும் என் நண்பரும் நீதிமன்றத்திற்கு வருவோம் என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்திலோ எதிரிக்கு கொடுத்த தொகையை ரொக்கமாகவோ, வங்கி மூலமாகவோ கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆல்வின் விவேக் என்பவர் நா.புதூர்

பகுதியைச் சேர்ந்தவர் என்றால் ஆம் என்று சொல்லிவிட்டு தற்போது சாட்சி தெரியாது என்று சொல்கிறார். எதிரி என்னிடம் கடனும் வாங்கவில்லை என்றாலும், கடனுறுதிசீட்டும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஆல்வின் விவேக் என்பவரின் அம்மா லில்லி புஷ்பம் என்பவரிடம் பெற்ற கடனிற்காக தாவா காசோலை மற்றும் பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டு கொடுத்திருந்தார் என்றாலும், அந்த காசோலை மற்றும் கடனுறுதிசீட்டையும் வைத்து என் நண்பரி ஆல்வின் விவேக் என்பவரின் வேண்டுகோலுக்கு இணங்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) எனது மனு, நிரூபண வாக்குமூலம் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி மாதம் மாதம் வட்டி செலுத்திய விபரத்தை ரொக்கமாக செலுத்தினாரா, வங்கி மூலம் செலுத்தினாரா UPI மூலம் செலுத்தினாரா என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரி எனக்க எந்த வட்டியும் செலுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் நண்பர் ஆல்வின் விவேக் என்பவரின் தாயார் எதிரி மற்றும் எதிரியின் மனைவி மீது காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எதிரி மீது காரைக்குடி தெற்கு காவல் நிலைத்தில் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை 65/2024 என்ற வழக்கு பதிவு செய்த விபரம் எ னக்கு தெரியும் என்றாலும் மேற்படி வழக்கில் எதிரி லில்லி புஷ்பம் என்பவரிடம் பல்வேறு தவணைகளில் கடன் பெற்றதற்காக பூர்த்தி செய்யபடாத, கையொப்பம் மட்டும் செய்த காசோலையையும், கடனுறுதிசீட்டையும் கொடுத்துவிட்டு மேற்படி கடனை லில்லி புஷ்பம் திருப்பி கேட்டபோது எதிரியும் அவரது மனைவியும் பிரச்சனை செய்தது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் பிவரம் தெரிந்தும் அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

4) எதிரி எழுதிக்கொடுத்தாக சொல்லும் கடனுறுதிசீட்டில் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை. அவ்வாறு சாட்சி கையொப்பம் செய்யப்படாத கடனுறுதிசீட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். நான் இன்டஸ்இன்ட் வங்கியில் நான் துணை மேலாளராக இருந்தேன் என்றால் சரிதான். நான் வங்கியில் பணியில்  இருந்தபோது கடன் கொடுப்பதற்களுக்கு எழுதப்படும் ஆதரவு ஆவணங்களில் சாட்சி கையொப்பம் வாங்குவதில்லை. வங்கியில் கடன் கொடுக்கும்போது சாட்சியாக 2 நபர்களிடன் கையொப்பம் வாங்குவது வழக்கம் என்றாலும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன். என்றாலும் சரியல்ல. கடனறுதிசீட்டில் கடன் கொடுக்கும்போது கடனுறுதிசீட்டை எழுதுபவரும், சாட்சியாளரும் கையொப்பம் செய்யப்படவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், வழக்கில் தாக்கல் செய்ப்பட்டுள்ள காசோலையை எதிரி என்னிடம் கொடுக்கவும் இல்லை என்றாலும், மேற்படி ஆல்வின் விவேக், லில்லி புஷ்பம் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் அவர்களிடம் காசோலையை பெற்று வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.06 15:08:08 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)